# Special Issue

# International Conference on Women of All Time

**(காலந்தோறும் பெண்)**

Organized by

Department of Tamil,

**Standard Fireworks Rajaratnam College for Women,**

Sivakasi, on 20.11.2022

in collaboration with

**International Research Journal of Tamil**

**சர்வதேசத் தமிழ் ஆய்விதழ்**

(UGC Care Approved & MLA Indexed Journal)

# Guest Editor Message



இனக்குழுச் சமுதாயத்தின் தொடக்க காலந்தொட்டுச் செழுமையின் குறியீடாக வலிமையானவளாக பெண் கருதப்பட்டதால் பெண் வணங்குதற்கும் வழிபாட்டிற்கும் உரியவளானாள். பண்டை தமிழ்இலக்கியங்களிலும் உலக இலக்கியங்களிலும் இதற்கானச் சான்றாவணங்களைக் காணலாம். இந்தியப் பெண்ணியம் 'தாய்மை', 'குடும்பம்' என்ற கருத்துருவங்களில் அடையாளப்படுத்தப்பட்டுள்ளது. மேலைநாடுகளில் இருந்து தமிழுக்கு அறிமுகமாகியுள்ள 'பெண்ணியத் திறனாய்வு' ஆண்-பெண் சமத்துவத்தில் கவனம் செலுத்தும் ஆய்வுமுறையாகும். பெண்களை புறந்தள்ளும் சமூகம், அரசியல், பொருளாதாரம், நிறுவன கட்டமைப்புக்கள் மற்றும் அவற்றின் செயல்பாடுகளைக் கேள்விக்குட்படுத்தி அனைத்து வகைப் பெண்களுக்கும் சமஉரிமை கிடைக்க போராடுதல் இதன் செயல்முறையாகும். ஆதலால், பெண்ணிய ஆர்வலர்கள் தம் படைப்புகளில் சமத்துவமின்மையின் மூலங்கள், சமத்துவத்தை அடைவதற்கான வழிமுறைகள் என்று பெண்ணிய விழிப்புணர்வு கருத்தாக்கத்தை விதைத்து வருகின்றனர். அவ்வகையில் சங்க காலம் முதல் தற்காலம் வரை பல்வேறு துறைகளிலும் பதிவு செய்யப்பட்டுள்ள பெண்களின் சாதனைகளை, சிந்தனைகளை ஆராயும் நோக்கோடு இக்கருத்தரங்கம் நடைபெறவுள்ளது. சமூகவியல், வரலாற்றியல், உளவியல், மார்க்சியம், அமைப்பியல், பின்னை அமைப்பியல் முதலிய கோட்பாடுகளோடு பெண்ணியத் திறனாய்வு நெருக்கம் கொண்டிருக்கிறது என்பதால் இதன் கருத்துநிலைகள், மிதவாதம், தீவிரவாதம் முதலிய பல பண்புகளைப் பெற்றிருக்கின்றன.

இக்கருத்தரங்கம் நடத்துவதற்கு வாய்ப்பளித்து எங்களை ஊக்கப்படுத்திய, எமது கல்லூரியின் கல்லூரித் தலைவர் திருமதி திலகவதி இரவீந்திரன் அவர்களுக்கும், கல்லூரிச் செயலர் திருமதி அருணா அசோக் அவர்களுக்கும், கல்லூரி முதல்வர் முனைவர் த. பழனீஸ்வரி அவர்களுக்கும், தமிழ்த்துறைத் தலைவர் முனைவர் பா. பொன்னி அவர்களுக்கும், இக்கருத்தரங்கம் சிறப்பாக அமைய உறுதுணையாக இருந்த எம்துறை பேராசிரியர்கள் அனைவருக்கும், தமிழ்த்துறை மாணவ செல்வங்களுக்கும் நன்றி கூற கடமைப்பட்டுள்ளேன்.


**முனைவர் மா. பத்ம பிரியா**
கருத்தரங்க ஒருங்கிணைப்பாளர்

**Dr. M. Padma Priya**
**Guest Editor cum Conference Convenor**